12.09.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## சூறாவளியால் மீன்பிடிக்க தடை:அடைப்பு வலை மீன்களுக்கு கிராக்கி

ராமநாதபுரம்:பலத்த சூறாவளியினால் படகுகள் மீன்பிடிக்கச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அடைப்பு வலை மீன்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.தனுஷ்கோடி, ராமேஸ்வரம், பாம்பன் கடல் பகுதிகளில் கடந்த சில நாட்களாக பலத்த சூறாவளி காற்று வீசிவருகிறது. காற்றின் வேகம் மணிக்கு 50 கி.மீ.,வரை உள்ளது. இதனால் ராமேஸ்வரம், பாம்பன், தனுஷ்கோடி உள்ளிட்ட கடல் பகுதிகளில் விசைப்படகு, நாட்டுப்படகு மீனவர்களுக்கு கடந்த சில நாட்களாக மீன்பிடிக்க செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. மண்டபம் கடல் பகுதியில் குறைவான படகுகள்கடலுக்குச் சென்றன. இந்நிலையில் தூண்டில், வீச்சு வலைகளில் பாரம்பரிய மீனவர்கள் பிடித்து வந்த மீன்கள் ஒரு சில இடங்களில் விற்கப்பட்டன. பாக் ஜல சந்தி, மன்னார் வளைகுடா கடலில் இலங்கை மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி முறையான அடைப்பு வலை மீன்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டது. இவ்விரு கடல் பகுதிகளில், கரையில் இருந்து அரை கி.மீ., க்குள் 30க்கும் மேற்பட்ட இடங்களில் அடைப்பு வலைகளில் சிக்கிய மீன்களை இலங்கை மீனவர்களிடம் வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். இதில் கிடைத்த விளை மீன் கிலோ ரூ.280, முரல் ரூ.240, சிரையா ரூ.180, நகரை ரூ.220, பாரை ரூ.220, சூவா பாரை ரூ.140 என விற்கப்பட்டது.

விசைப்படகு, நாட்டுப்படகு மீன்கள் விலையுடன் ஒப்பிடும் போது கிலோவுக்கு ரூ.130 முதல் 150 வரை அதிக விலை போனது. கூடுதல் விலை கொடுக்க அசைவ பிரியர்கள் தயாராக இருந்தாலும் மீன் வரத்து குறைவால் அடைப்பு வலை மீன்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டது.

## தானியங்களை பாதுகாக்கும் குதிர்கள் பழமை மாறாத திண்டுக்கல் மக்கள்

திண்டுக்கல்:தானியங்களை பாதுகாக்கும் குதிர்களை பயன்படுத்தும் பழக்கம் திண்டுக்கல் மாவட்ட கிராம மக்களிடம் இன்றும் உள்ளது.பழங்காலங்களில் நெல், கம்பு, கேழ்வரவு, குதிரைவாலி, வரகு போன்ற தானியங்கள் அதிகளவில் விளைந்தன. தானியங்களை சேமிக்கவும், மழை, வெயில், பூச்சிகளில் இருந்து பாதுகாக்கவும் குதிர்களை பயன்படுத்தினர். இதில் பல நாட்கள் வரை தானியங்கள் பாதுகாக்கப்படும். மேல் பகுதியில் காற்று செல்லும் துளை இருக்கும். சில குதிர்களின் அடித்தளம், தரையில் இருந்து 3 அடி உயரத்தில் இருக்கும்.விளையும் தானியங்களின் அளவுக்கு ஏற்ப குதிர்களை அமைத்துள்ளனர். அதிகபட்சம் 8 அடி உயரம் இருக்கும். தானியங்களை தனித்தனியாக கொட்டி வைக்க 4 அறைகள் உள்ளன. தானியங்களை மேல் பகுதியில் கொட்டி, கீழ் பகுதியில் எடுப்பர்; இதற்காக வழிகள் உள்ளன. இன்றும் திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டி, ஆலமரத்துப்பட்டி, பாறைப்பட்டி, எட்டமநாயக்கன்பட்டி, பொட்டி செட்டிப்பட்டி, ராஜதாணிக்கோட்டை உள்ளிட்ட கிராமமக்கள் பாரம்பரியம் மாறாமல் குதிர்களை பயன்படுத்தி வருகின்றனர்.காந்திகிராம பல்கலை தமிழ்ப் பேராசிரியர் முத்தையா கூறியதாவது:குதிர்களை குழுமை, தானியக்குழி என்றும் அழைப்பர். குதிர்களை நொச்சி தழைகளை பயன்படுத்தி செம்மண்ணால் பூசியுள்ளனர். தற்போது வெளிப்புறத்தில் சிமென்ட் பூச்சும்

பூசியுள்ளனர்.தானியங்களின் மேற்பகுதியில் வேப்ப இலையையும், கீழ் பகுதியில் நொச்சி தழையையும் வைத்துள்ளனர். இதனால் பூச்சிகள் வராது. இந்த குதிர்கள் உணவுக்கு உத்தரவாதம் தருகின்றன. பழங்காலத்தில் இருந்து சேமிக்கும் பழக்கம் தமிழர்களிடம் இருந்துள்ளது. இதனால் வறட்சி காலங்களில் கூட உணவுக்காக அவர்கள் கஷ்டப்படவில்லை. தானியங்கள் இருப்பில் இருப்பதால் நிம்மதியாக இருந்தனர், என்றார்.

## மீனவர்கள் கடலுக்குள் செல்ல தடை

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த பாம்பன் பகுதி மீனவர்கள் கடலுக்குள் செல்வதற்கு மீன்வளத்துறை தடை விதித்துள்ளது. கடலில் மீன் பிடிப்பதற்காக மீன்வளத் துறைசார்பில் மீனவர்களுக்கு அடையாள டோக்கன் வழங்கப்படுவது வழக்கம் . தற்போது கடலில் காற்றின் வேகம் மணிக்கு 50கி.மீ முதல் 60 கி.மீ வரையில் வீசுவதால் பாம்பன் பகுதியை சேர்ந்த நாட்டுபடகு, விசைப்படகு மீனவர்களுக்கு அடையாள டோக்கன்களை மீன்வளத்துறை அதிகாரிகள் வழங்கவில்லை

## ஆடு, மாடு, நாட்டு கோழிகள்பயனாளிக்கு வழங்க நடவடிக்கை

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்டத்தில், நடப்பு ஆண்டு தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆடு, மாடு மற்றும் நாட்டு கோழிகள் விரைவில் வழங்கப்படும் என, கால்நடைபராமரிப்பு துறை இணை இயக்குனர் கூறினார்.திருவள்ளூர் மாவட்டத்தில், 2011ம் ஆண்டு முதல் கறவை மாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு திட்டத்தின் கீழ், பயனடைந்த பயனாளிகளை, கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் சங்கர சுப்ரமணியன் நேரில் சந்தித்தார்.பின், அவர் நிருபர்களிடம் கூறியதாவது:திருவள்ளூர் மாவட்டத்தில், கறவை பசு வளர்ப்பு

திட்டத்தின் கீழ், 2011 - 15 வரை, 13.39 கோடி ரூபாய் மதிப்பிலான, 3,800 பசுக்கள் வழங்கப்பட்டு உள்ளன. நடப்பு ஆண்டில், 1,050 கறவை பசுக்கள் வழங்கப்பட உள்ளன.ஆடு வளர்ப்பு திட்டத்தில், 2011 - 15 வரை, 25 கோடி ரூபாய் மதிப்பிலான, 77,632 வெள்ளாடுகள் வழங்கப்பட்டு உள்ளன. நடப்பு ஆண்டில், பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, 20,696 வெள்ளாடுகள் வழங்கப்பட உள்ளன.

நாட்டு கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ், 2012 - 15 வரை, 1.34 கோடி ரூபாய் கடன் மற்றும் மானியத்தில், 435 பயனாளிகளுக்கு, கோழிகள் வழங்கப்பட்டு உள்ளன. நடப்பு ஆண்டில், 160 பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளன.இவ்வாறு அவர் கூறினார்.பயனாளிகளை சந்திக்கும் நிகழ்ச்சியில், திருவலாங்காடு ஒன்றிய குழுத் தலைவர் குணாளன், உதவி இயக்குனர்கள் செல்லத்துரை, கீதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கொய்யா சாகுபடி குறைப்பால் வரத்து சரிவு: ஆப்பிள் பழத்தின் விலையை தொட்டது**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், கொய்யா பழம் வரத்து குறைவாக உள்ளதால், ஆப்பிள் விலைக்கு நிகராக, விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன், அனைவராலும் எளிதில் வாங்கி உண்ணக்கூடிய பழங்களில், ஒன்றாக கொய்யாப்பழம் இருந்தது. மேலும், வீட்டு தோட்டங்களிலும், கொய்யா முக்கிய இடம் வகித்தது. தற்போது, கொய்யா சாகுபடி தொடர்ந்து குறைந்து வருவதுடன், வீட்டு தோட்டங்களில், கொய்யா செடிகளை காண்பது அரிதான ஒன்றாகவுள்ளது. இதனால், ஊட்டசத்து, தாது உப்புகள் அதிகளவில் அடங்கிய கொய்யா விலை, தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த சில நாட்களாக, தர்மபுரி மாவட்டத்தில், கொய்யா பழம் விலை, ஆப்பிளின்

விலைக்கு நிகராக உள்ளதால், சாதாரண மக்கள், கொய்யா பழங்களை வாங்க, சற்று யோசித்து வருகின்றனர்.

இதுகுறித்து, தர்மபுரியை சேர்ந்த வியாபாரி மாதேஸ் கூறியதாவது: தர்மபுரியில், தள்ளுவண்டி விற்பனையாளர்கள் , நூற்றுக்கும் மேற்பட்டோர் உள்ளனர். நாங்கள், சீஸனுக்கு தகுந்தவாறு, கொய்யாக்காய், ஆப்பிள், பப்பாளி, திராட்சை, முலாம் பழம், சப்போட்டா உள்ளிட்ட பழங்களை விற்பனை செய்து வருகிறோம். தற்போது, கொய்யா பழம், ஆப்பிள் பழங்களின் சீஸனாக உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில், 200 ஏக்கர் மட்டுமே கொய்யா சாகுபடி செய்யப்படுகிறது. இதனால், கொய்யா பழங்கள் வரத்து குறைந்து, விலை அதிகரித்துள்ளது. நாங்கள் விவசாயிகளிடம், கிலோ, 50 ரூபாய்க்கு வாங்கி, 60 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம். இவற்றை, சாதாரண மற்றும் நடுத்தர மக்கள், மிக குறைந்தளவே வாங்கி செல்கின்றனர். காரணம், ஆப்பிள் வரத்து அதிகரித்துள்ளதால், ஒரு கிலோ ஆப்பிள், 60 முதல், 80 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால், இவர்கள், தற்போது, ஆப்பிள் பழங்களை வாங்க அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மூன்று மாதங்களுக்கு, கொய்யா பழம் சீஸன் தொடரும். மேலும், வேலூர் மாவட்டம், ஆந்திரா மாநிலம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து, அடுத்த மாதம், கொய்யா பழம் வரத்து துவங்கும் போது, அதன் விலை குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## விவசாயிகளுடன் அனுபவ பயிற்சி

வில்லியனுார்: வேளாண் கல்லுாரி மாணவர்கள் தொண்டமாநத்தம் விவசாயிகளுடன் அனுபவ பயிற்சி பெற்று வருகின்றனர்.

வில்லியனுார் துணை வேளாண் இயக்குனர் முருகேசன் மேற்பார்வையில் காரைக்கால் வேளாண் கல்லுாரி மாணவர்கள் ஆறு பேர் தொண்டமாநத்தம் உழவர் உதவியகத்தில் தங்கி அப்பகுதி விவசாயிகளுடன் வேளாண் அனுபவங்கள் குறித்து பயிற்சி பெற்று

வருகின்றனர். வேளாண் அறிவியல் நிலையத்தில் பல பிரிவு அலுவலர்களிடம் பயிற்சி பெற்று வருகின்றனர்.வேளாண் கல்லூரி மாணவர்கள் ஆறு பேரும் 90 நாட்கள் இந்த பகுதியில் தங்கி கிராமப்புற வேளாண் அனுபவங்கள் குறித்து பயிற்சி பெற உள்ளனர்.

பயிற்சி ஏற்பாடுகளை தொண்டமாநத்தம் உழவர் உதவியக வேளாண் அலுவலர் நடராஜன், உதவி வேளாண் அலுவலர் செல்வநாதன், கிராம விரிவாக்கப் பணியாளர்கள் கிருஷ்ணன், நாராயணசாமி, மதிவதணன், பாலசுந்தரம் செய்து வருகின்றனர்.

## சத்தி ஏலத்தில் செவ்வாழை விலை "அதிகரிப்பு'

சத்தியமங்கலம்: சத்தியமங்கலத்தில் நடந்த வாழை ஏலத்தில், செவ்வாழை மற்றும் தேன் வாழைகளின் விலை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.சத்தியமங்கலம், கோபி ரோட்டில் உள்ளது சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம். இந்த சங்கத்தில், ஒவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய இரண்டு நாட்கள், வாழை ஏலம் நடக்கிறது. இந்த ஏலத்தில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், கேரளா, கர்நாடகா ஆகிய பகுதிகளில் இருந்தும், வாழை வியாபாரிகள் அதிகமாக வந்து, வாழைகளை ஏலம் முறையில் வாங்கி செல்வர். ஒரு கிலோ, 42 ரூபாய்க்கு கதளி வாழை விற்பனையானது. தேன் வாழை தார் ஒன்று, 550 ரூபாய் வரையிலும், செவ்வாழை தார் ஒன்று அதிகபட்சமாக, 600 ரூபாய் வரையிலும் விற்பனையானது. நேந்திரம் பழம், கடந்த வாரத்தைவிட விலை குறைந்து, ஒரு கிலோ, 27 ரூபாய்க்கு விற்பனையானது. செவ்வாழை தார் ஒன்று அதிகபட்சமாக, 715 ரூபாய் வரை விற்பனையானது. நேற்று மொத்தம், 7 லட்சம ரூபாய்க்கு வாழைத்தார் விற்பனையானது. செவ்வாழை மற்றும் தேன் வாழைகளின் விலை அதிகரிப்பால், வாழை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## இயற்கை காளான் விளைச்சல் குறைவு

தேனி:தேனி மாவட்டத்தில் இந்த ஆண்டு இயற்கை காளான் உற்பத்தி குறைந்துவிட்டது.

தென்மேற்கு பருவமழை பெய்யும் காலங்களில் காளான் உற்பத்தி அதிகம் இருக்கும். தொடர் மழை, தொடர்ந்து வெயில், மீண்டும் மழை, மின்னல் இவற்றால் இயற்கை காளான் அதிக அளவில் கிடைக்கும்.வயல் வரப்புகள், மேய்ச்சல் நிலங்கள், மலை அடிவாரப்பகுதிகள், விளைநிலங்களில் காளான் விளைச்சல் இருக்கும். காளான்களை பொழுது போக்காக சென்று பறித்து வருவர். அம்பு காளான், குடை காளான், முட்டை காளான், அவல் காளான் வகைகள் வீதிகள் தோறும் விற்பனை செய்வதும் உண்டு. ஆனால் இந்த ஆண்டு காளான் உற்பத்தி இல்லாததால் விற்பனைக்கும் வரவில்லை.

விவசாயிகள் கூறியதாவது: இந்த ஆண்டு போதுமான அளவு மழை இல்லை. இதனால் காளான் உற்பத்தி குறைந்து விடடது. இயற்கை உரங்கள் தவிர்த்து ரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்துவதால் காளான் முளைப்பதில்லை. இதனால் இயற்கை தன்மை குறைந்து வருகிறது,என்றனர்.

## ஊட்டச்சத்து வாரவிழா

தேனி:மதுரை மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவ, மாணவிகள், காமாட்சிபுரம் சென்டெக்ட் விவசாய அறிவியல் மையம் சார்பில் ஊட்டச்சத்து வாரவிழா சீப்பாலக்கோட்டையில் நடந்தது. பயிற்சி முகாம்கள், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு முகாம்கள், அடுப்பில்லாத சமையல் போட்டிகள், கர்ப்பிணி பெண்களுக்கு

மருத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மனையியல் கல்லூரி முதல்வர் புஷ்பா தலைமை வகித்தார். சென்டெக்ட் அறிவியல் மைய தலைவர் மாரிமுத்து, மாடி தோட்டம், மூலிகை தோட்டம் குறித்து மக்களிடம் பேசினார். பேராசிரியர் காஞ்சனா, அமுதா, ஜானகிராணி, சிஸி தீப்லின் டேவிட், ஹேமலதா, கமலாசுந்தரி உட்பட பலர் பங்கேற்றனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கடலுக்குள் செல்ல வேண்டாம்: பாம்பன் பகுதி மீனவர்களுக்கு மீன்வளத்துறை அறிவுறுத்தல்**

கடலில் காற்றின் வேகம் மணிக்கு 50கி.மீ முதல் 60 கி.மீ வரையில் வீசுவதால் பாம்பன் பகுதியை சேர்ந்த நாட்டுபடகு, விசைப்படகு மீனவர் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கடலில் மீன் பிடிப்பதற்காக மீன்வளத் துறைசார்பில் மீனவர்களுக்கு அடையாள டோக்கன் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது கடலில் காற்றின் வேகம் மணிக்கு 50கி.மீ முதல் 60 கி.மீ வரையில் வீசுவதால் பாம்பன் பகுதியை சேர்ந்த மீனவர்கள் கடலுக்குள் செல்ல மீன்வளத்துறை தடை விதித்துள்ளது. எனவே அவர்களுக்கு அடையாள டோக்கன்களை மீன்வளத்துறை அதிகாரிகள் வழங்கவில்லை.

**தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு**

வெப்பச் சலனம் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில், திருவள்ளூர் மாவட்டம் - பொன்னேரியில் 30 மி.மீ, கன்னியாகுமரி மாவட்டம் - மயிலாடி, இரணியில், விழுப்புரம், நாகர்கோவில், குளச்சலில் 20 மி.மீ மழை பதிவாகியது. நான்கு நாள்களுக்கு மழை நீடிக்கும்: வெப்பச் சலனம் தொடர்ந்து நீடிப்பதால், தமிழகம், புதுச்சேரியில் சனிக்கிழமையன்று ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும். அடுத்து வரும் 4 நாள்களுக்கு, தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே மழை பெய்யும் வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## தமிழகம் முழுவதும் சீமைக்கருவேல மரங்களை அழிக்க முடிவு: உயர்நீதிமன்றத்தில் அரசு தகவல்

தமிழகத்தில் சீமைக்கருவேல மரங்களை அழிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. சீமைக்கருவேல மரங்களை அழிக்கவும், அந்த மரங்களால் ஏற்பட்ட பாதிப்பை ஈடுகட்டவும் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யக் கோரி மதிமுக பொதுச் செயலர் வைகோ மனுத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், இம்மரங்களை வேரோடு அகற்றுமாறு 2013-இல் உயர் நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்ட போதும் அரசு மெத்தனமாக இருந்தது. இது குறித்து தமிழக அரசின் தலைமைச் செயலர், தென் மாவட்ட ஆட்சியர்களுக்கு மனு அனுப்பிய போதும் நடவடிக்கை

எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டிருந்தார். இம்மனு நீதிபதிகள் ஆர்.சுதாகர், வி.எம்.வேலுமணி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் வைகோ, நேரில் ஆஜராகி வாதிட்டார்.

1960-ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவில் இருந்து தமிழகத்துக்கு கொண்டு வரப்பட்ட சீமைக் கருவேல மரங்கள் நிலத்தடி நீர், ஆக்சிஜனை அதிக அளவு ஈர்த்து விவசாயம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றார். அப்போது அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர் கே.செல்லப்பாண்டியன் ஆஜராகி, உயர் நீதிமன்ற உத்தரவின் படி சீமைக்கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக தமிழக அரசு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளது. சீமைக்கருவேல மரங்களை வேரோடு அகற்ற அரசு முடிவு செய்துள்ளது என்றார்.

நீதிமன்றம் உத்தரவை சுட்டிக்காட்டி சீமைக்கருவேல மரங்களை அழிக்கக் கோரியதற்கு விருதுநகர், சிவகங்கை மாவட்ட ஆட்சியர்கள் மட்டும் பதில் அனுப்பியுள்ளனர். நான் வழக்கு தொடர்ந்த பிறகு தான், அரசு அவசரமாக ஆலோசனை நடத்தியுள்ளது என வைகோ தெரிவித்தார். இதையடுத்து, சீமைக்கருவேல மரங்களை எந்த வகையில் கூண்டோடு அகற்றலாம் என்பது குறித்து நீதிமன்றத்துக்கு ஆலோசனைகள் கூறவிரும்புவோர் கூறலாம் எனக் கூறிய நீதிபதிகள், உயர் நீதிமன்ற உத்தரவின்படி சீமைக்கருவேல மரங்களை அகற்ற மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து தமிழக அரசின் தலைமைச் செயலர் மற்றும் 13 தென்மாவட்ட ஆட்சியர்கள் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டனர். விசாரணை அக்டோபர் 6-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

**மத்திய அரசுக்கு வைகோ கண்டனம்**

வழக்கு விசாரணைக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் வைகோ கூறியதாவது:

சீமைக்கருவேல மரங்களை அகற்ற கேரள அரசு தீவிர நடவடிக்கை எடுத்து அடியோடு அகற்றியுள்ளது. அதேபோன்ற உத்தியைப் பின்பற்றி தமிழகத்திலும் சீமக்கருவேல மரங்களை அகற்ற வேண்டும். காவிரி டெல்டா சாகுபடிக்கு தண்ணீர் திறக்க முடியாது என கர்நாடகத்தைச் சேர்ந்த மத்திய சட்ட அமைச்சரே கூறியிருப்பது வேதனை அளிக்கிறது. அவரை பதவியில் இருந்து பிரதமர் நரேந்திரமோடி நீக்க வேண்டும். வெளியுறவுத் துறை சார்பில் இந்தி மாநாடு நடத்தியுள்ளது அப்பட்டமான இந்தி திணிப்பு முயற்சி ஆகும். இதை மதிமுக வன்மையாகக் கண்டிக்கிறது. ஆர்.எஸ்.எஸ். வழிகாட்டுதலின் படி பள்ளிப் பாடங்களில் புராணக் கதைகளைப் புகுத்தவும் மத்திய அரசு உத்தேசித்துள்ளது. திருப்பூரில் நடைபெற உள்ள மதிமுக மாநாட்டில் இப்பிரச்னைகள் குறித்து ஆலோசித்து முடிவு செய்யப்படும் என்றார்.

### பயிர்க் காப்பீடு செய்ய கால அவகாசம்

தேசிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் பதிவு செய்யவதற்கான கடைசி தேதி நவ.15-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் துறை இயக்குநர் சி.என்.சுவாமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேசிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், பயிர்க் கடன் பெறாத விவசாயிகள் தாங்கள் விதைத்துள்ள பயிர்களுக்கு பயிர்க் காப்பீடு செய்வதற்கான கடைசி தேதியை நவ.15-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஆக.1-ஆம் தேதி முதல் விதைக்கப்பட்ட பயிர்களுக்கு இதில் காப்பீடு பெறலாம். பயிருக்காக விதை விதைக்கப்பட்டுள்ளதற்கான உறுதிச் சான்றிதழை வருவாய்த் துறை அதிகாரிகளிடமிருந்து பெற்று,

சம்பந்தப்பட்ட வங்கிகளில் ஒப்படைக்கலாம். உறுதிச் சான்றிதழ் ஒப்படைப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பயிர்க் காப்பீட்டில் பதிவு செய்ய காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ள வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதுகுறித்து விவசாயிகள் தகவல் தொடர்பு மையங்கள் அல்லது வங்கிகளில் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நத்தம் பகுதியில் மானிய விலையில் விவசாயிகளுக்கு கருவிகள்

நத்தம் பகுதி சிறு, குறு விவசாயிகள் மானிய விலையில் விவசாயக் கருவிகள் பெற தங்களது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு, வேளாண்மை உதவி இயக்குநர் பி. ரவிபாரதி வியாழக்கிழமை கேட்டுக்கொண்டார்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வேளாண்மை அலுவலகம் மூலம் இப்பகுதி சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய விலையில் விசைத் தெளிப்பான், விதை நடு கருவி, பவர் டில்லர் உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன. மேலும், 40 சதவீத மானியத்தில் இதே கருவிகள் மற்ற விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட விவசாயிகள் அதற்கான ஆவணங்களுடன் அலுவலகத்துக்கு வந்து தங்களது பெயர்களை பதிவுசெய்து பயன்பெறுமாறு, வேளாண்மை உதவி இயக்குநர் பி. ரவிபாரதி தெரிவித்துள்ளார்.

## பாம்பன் பகுதியில் பலத்த சூறைவாளி காற்று: மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல அனுமதி நிறுத்தம்

பாம்பன் கடலோரப் பகுதியில் பலத்த சூறாவளி காற்று வீசிவருவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்வதற்கு மீன்துறை அதிகாரிகள் வியாழக்கிழமை அனுமதி சீட்டு

வழங்கவில்லை. இதனால் 400 க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்கசெல்லவில்லை.

பாம்பன் கடலோரப் பகுதியில் 95 விசைப்படகுகள் மூலம் 400க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் வாராவாரம் சுழற்சி முறையில் மூன்று நாள்கள் மட்டும் தென்கடல் பகுதியில் மீன்பிடிக்க சென்று வருகின்றனர். இந்நிலையில் பாம்பன் தென்கடல் பகுதியில் புதன்கிழமை நள்ளிரவு முதல் 50 முதல் 60 கி.மீட்டர் வேகத்தில் பலத்த சூறாவளி காற்று வீசி வருவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ராமேசுவரம் மீன்துறை அதிகாரிகள் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்வதற்கு அனுமதி சீட்டு வழங்காமல் நிறுத்திவைத்துள்ளனர். இதையடுத்து 400க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லாமல், படகுகளை நங்கூரமிட்டு பாதுகாப்பாக நிறுத்திவைத்துள்ளனர்.

**பச்சை மிளகாய் விலை வீழ்ச்சி**

பச்சை மிளகாய் விலை வீழ்ச்சி அடைந்திருப்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

6 மாதகாலப் பயிரான பச்சை மிளகாய் நடவு செய்த 2 மாதத்தில் அறுவடைக்கு வருகிறது. நஷ்டத்தை ஏற்படுத்தாது என்பதாலும், மிளகாய்க்கு சீரான விலை கிடைத்து வந்ததாலும் கடந்த வைகாசிப் பட்டத்தில் பல்லடம், பொங்கலூர் பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் பச்சை மிளகாய் சாகுபடி செய்திருந்தனர்.

மிளகாய்க்கு நல்ல விலை கிடைத்ததால் பச்சையாக விற்பனை செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வந்தனர். கடந்த வாரம் வரை ஓரளவு நல்ல விலை கிடைத்து வந்த நிலையில், தற்போது விளைச்சல் அதிகரித்து, வரத்து அதிகரித்ததால் பச்சை மிளகாய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதையடுத்து, கடந்த வாரம் கிலோ ரூ. 30-க்கு விற்பனையான மிளகாய் தற்போது கிலோ ரூ. 20-க்கு விற்பனையாகி வருகிறது. ஒரே வாரத்தில் மூன்றில் ஒரு பங்கு விலை குறைந்திருப்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி

கோவை வேளாண் விற்பனை, வேளாண் வணிகத் துறை விற்பனைக் குழு சார்பில், சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அறுவடைக்குப்பின் செய் நேர்த்தி குறித்து விவசாயிகளுக்கான தொழில்நுட்பப் பயிற்சி, கருத்தரங்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில், வேளாண்மை உதவி இயக்குநர் சாத்தப்பன், சந்தைப்படுத்துதல், தரம்பிரித்தல், சிப்பம் கட்டுதல், சந்தை சார்ந்த சாகுபடித் திட்டம், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைத்தல் ஆகியன குறித்தும், அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி குறித்த தொழில் நுட்பங்கள் குறித்தும் விளக்கமளித்தார்.

இதில், சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொ) ராஜு, வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) நித்யா, வேளாண்மை உதவி அலுவலர் வினோத்குமார் ஆகியோர் பேசினர்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியப் பணியாளர்கள், விற்பனைக்கூடப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

## கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பு ஒத்திகை

மாவட்டத்தில் உள்ள கடலோரப் பகுதிகளில் கடல்வழியாக தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுப்பதற்காக ஆபரேஷன் ஆம்லா என்ற பெயரில் காவல் துறையினர் பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சியை வெள்ளிக்கிழமை நடத்தினர்.

மாவட்டத்தில் கோட்டகுப்பம் முதல் மரக்காணம் வரை உள்ள கடற்கரைப் பகுதிகளில் காவல் ஆய்வாளர் சந்திரசேகரன் தலைமையில்

இந்த ஒத்திகை நடைபெற்றது. கோட்டகுப்பம், அழகன்குப்பம், சின்னமுதலியார் சாவடி, பெரியமுதலியார் சாவடி, கைப்பாணிக்குப்பம், மண்டவாய்புதுக்குப்பம், அனுமந்தைகுப்பம், கூனிமேடுகுப்பம், நொச்சிகுப்பம் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் போலீஸார் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர். இக் கண்காணிப்புப் பணியில் 120 போலீஸார் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் கடலோரப் பகுதியில் உள்ள சோதனைச் சாவடிகளையும் கண்காணித்தனர். எனினும் சோதனையின்போது யாரும் சிக்கவில்லை.

கடல் வழியாக தீவிரவாதிகள் ஊடுருவி மும்பை பகுதியில் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து கடலோர கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக இந்த பாதுகாப்பு ஒத்திகை ஆபரேஷன் ஆம்லா என்ற பெயரில் நடைபெறுகிறது.

## வேளாண் விளைபொருள்கள் சந்தைப்படுத்துதல் பயிற்சி

வேளாண்மைத் துறை சார்பில் வேளாண் விளைபொருள்களை மதிப்புக் கூட்டுதல், சந்தைப்படுத்துதல் பயிற்சி முகாம் வந்தவாசியில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் வந்தவாசி, தெள்ளாறு வட்டாரத்துக்கு உள்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயிற்சி பெற்றனர்.

வந்தவாசி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கி.ராஜசேகரன் தலைமை வகித்தார். தெள்ளாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மா.கௌதமன் பயிற்சி முகாமைத் தொடக்கி வைத்தார்.வேளாண் பொருள்களைச் சந்தைபடுத்துதல் குறித்து வேளாண் அலுவலர்கள் குமரன், இரா.சுகன்யா, மதிப்புக் கூட்டுதல் குறித்து வேளாண் அலுவலர் சண்முகம், தோட்டக்கலை பயிர்களை மதிப்புக் கூட்டுதல், பதப்படுத்துதல் குறித்து கீழ்நெல்லி வேதபுரி அறிவியல் ஆராய்ச்சி மைய ஆராய்ச்சியாளர்

மார்கரேட் ஆகியோர் விளக்கிப் பேசினர்.வட்டார தொழில்நுட்ப மேலாளர் சா.பாலவித்யா, துணை வேளாண்மை அலுவலர்கள் ஆறுமுகம், ராஜாராம், உதவி விதை அலுவலர் பார்த்திபன், வேளாண்மை உதவி அலுவலர்கள் அருள்செல்வம், சரவணகுமார், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் த.பெருமாள், வெங்கடேசன், விஷ்ணு, அவந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கரும்புச் சோகையை உரித்து மூடாக்கு செய்பவர்களுக்கு மானியம்**

கரும்பிலிருந்து சோகையை உரித்து மூடாக்கு அமைக்கும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும் என்று மேற்கு ஆரணி வேளாண் உதவி இயக்குநர் ஏ.எம். சாந்தி கூறினார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தப் பணியை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டருக்கு மானியமாக ரூ. 2,500 வழங்கப்படும்.

அதிகபட்சமாக 2 ஹெக்டர் வரை மானியம் வழங்கப்படும். மானியம் பெற விரும்பும் விவசாயிகள், கரும்புச் சோகை உரித்து மூடாக்கு அமைத்ததற்கான புகைப்படம், நில ஆவணங்களுடன் மேற்கு ஆரணி வேளாண்மை விரிவாக்க மையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

**முதலீடும், தமிழ்நாடும்!**

தமிழ்நாட்டில் முதல்முறையாக நடைபெற்றுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாடு, அரசியல் விமர்சனங்களைத் தாண்டி, வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. முதலீடுகளுக்கு வலுவான தளம் அமைத்துள்ளது. நிறைவுரையில் முதல்வர் ஜெயலலிதா குறிப்பிட்டதைப்போல, ரூ.2.42 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீட்டைக் கொண்டுவரும் தொழில்

முன்மொழிவுகளைப் பல்வேறு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.
முதல் நாளே ரூ.2,568 கோடியில் மூன்று ஆலைகளைத் திறந்துவைத்துத்தான் இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை முதல்வர் தொடக்கி வைத்தார்.
பிரதமர் நரேந்திர மோடி பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்து, இந்தியாவில் தயாரிப்போம் (மேக் இன் இந்தியா) திட்டத்துக்கு உலக முதலீட்டாளர்களை இந்தியாவுக்கு வரும்படி அழைப்பு விடுக்கும் வேளையில், ஒரு மாநில முதல்வராகத் தனிப்பட்ட முறையில் இத்தகைய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தவும், இவ்வளவு தொழில் நிறுவனங்களை ஒன்று திரட்டவும், இலக்கைத் தாண்டிய முதலீட்டைப் பெறவும் செய்திருப்பது, தமிழக முதல்வருக்குப் பெருமை சேர்த்திருக்கிறது.
தமிழ்நாட்டுக்கு கூடுதலாகத் தொழில் முதலீடு வருகின்றது என்பது ஒருபுறம் இருக்க, இந்த முதலீடுகளை தென் மாவட்டங்களை நோக்கித் திருப்பிவிடவும், இதற்காகக் கூடுதல் சலுகை அளிக்கவும் முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ள 30 நாள்களில் தொழில் அனுமதி என்கின்ற அறிவிப்பு, தற்போது சென்னையை மையம் கொண்டுள்ள தொழில் வளர்ச்சியைத் தென் மாவட்டங்களுக்குப் பரவலாக்கும்.
இதன் மூலம் லட்சக்கணக்கானோர் வேலைவாய்ப்பு பெறுவர். வேலைவாய்ப்பு என்றாலே சென்னை வந்தால்தான் கிடைக்கும் என்ற நிலையை மாற்றுவதன் மூலம் சென்னையில் மக்கள் நெரிசலை, வாகன நெரிசலை, தொழில் தேக்க நிலையை இயல்பான சூழலில் மாற்றி அமைக்க முடியும்.
தமிழகத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஷிவ் நாடார் (எச்.சி.எல்.) இந்த மாநாட்டில் குறிப்பிடுகையில், அடுத்த ஐந்து ஆண்டுகளில் மதுரை, திருநெல்வேலி பகுதிகளில் ரூ.6,600 கோடி முதலீடு செய்யப்படும் என்று அறிவித்துள்ளார். எச்.சி.எல். நிறுவனத்தில் பணிபுரியும் 1.10 லட்சம்

தொழிலாளர்களில் 75,000 பேர் இந்தியர்கள், இவர்களில் 35,000 பேர் தமிழர்கள். அடுத்த ஐந்து ஆண்டுகளில் மதுரை, திருநெல்வேலி பகுதிகளில் இந்நிறுவனம் முழுமையாகக் காலூன்றும்போது, பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவது உறுதி.

ஏற்கெனவே ராமநாதபுரம் பகுதியில் 650 மெகாவாட் சூரிய வெப்ப மின் உற்பத்திக்கு ஒப்பந்தம் செய்துள்ள அதானி நிறுவனம், தற்போது ரூ.10,000 கோடி அளவுக்கு அனல் மின் நிலையம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. அதுவும்கூடத் தென் மாவட்டங்களில்தான் அமைக்கப்படும். இதேபோன்று சன் எடிசன் நிறுவனமும் சூரிய வெப்ப மின் உற்பத்தி, அனல் மின் உற்பத்தியில் ஈடுபடவுள்ளது. இதற்காக ரூ.10,000 கோடி முதல் ரூ.15,000 கோடி வரையிலான முதலீடு செய்யவுள்ளது. இதேபோன்று பல்வேறு துறைகளில் பல நிறுவனங்கள் அளித்துள்ள தொழில் முன்மொழிவுகளைப் பட்டியலிட்டால் அவை விரிந்துகொண்டே போகும்.

மாநாட்டில் பங்கு கொண்ட மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், பொன். ராதாகிருஷ்ணன் ஆகியோர் சென்னை - பெங்களூரு வழிமருங்குத் தொழில்பேட்டை (இன்டஸ்டிரியல் காரிடார்) திட்டம், குளச்சல் துறைமுக மேம்பாடு ஆகியன குறித்து அளித்துள்ள உறுதிமொழிகள் இதே வேகத்தில் செயலாக்கம் பெறுமெனில், இந்த முதலீடுகள் வந்து சேர்வதும் வேகமாக அமையும். மத்திய அரசு தொடர்பான அனுமதிகளை விரைந்து வழங்க வேண்டும் என்று மத்திய அமைச்சர்களுக்கு முதல்வர் ஜெயலலிதாவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வளவு வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ள இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வெறுமனே அடுத்த தேர்தலைச் சந்திப்பதற்கான பிரசார உத்தி என்று அரசியல் கட்சிகள் அறிக்கை விடுவதும், இவை வெறும் ஏட்டுச் சுரைக்காய் என்று பலர் தங்கள்

முகநூலிலும் கட்செவி அஞ்சலிலும் எதிர்க் கருத்தை முன்வைப்பதும், இந்த மாநாட்டையொட்டி நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளின் படங்களையும், தொண்டர்களின் ஆட்டங்களையும் மட்டும் பதிவிட்டு அதன் தன்மையைக் குலைத்து, வெற்றியைக் கொச்சைப்படுத்தும் போக்கும் அவர்கள் தமிழகத்தின் வளர்ச்சியைவிடத் தங்கள் அரசியல் மனமாச்சரியங்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கிறார்கள் என்பதை வெளிச்சம் போடுகின்றன.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வரும் நிறுவனங்களில் சிலவற்றால் தமிழக சுற்றுச்சூழல், மக்கள் நலவாழ்வு பாதிக்கப்படக் கூடும் என்பதாக இருந்தால், அவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லி, அத்தகைய தொழில்களுக்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி அறிக்கை வெளியிடலாம். ஆனால், இந்த மாநாட்டையே ஒட்டுமொத்த அரசியலாக்கப் பார்ப்பது அரசியல் காழ்ப்புணர்வின் வெளிப்பாடன்றி வேறல்ல.

தமிழ்நாட்டில் யாருடைய ஆட்சி நடந்தாலும் இந்த மாநாட்டின் விளைவாக வந்து குவியும் முதலீடுகளால் அடுத்த ஆண்டு இதே காலகட்டத்தில் பயன்பெறப் போவது தமிழகமும், தமிழர்களும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. 2.42 லட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடு வந்து சேரும்போது, ஒரு கோடித் தமிழ் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றிருப்பார்கள். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக அரசியல் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், தமிழகத்தின் தொழில் வளர்ச்சி மட்டும் உறுதி என்பதற்கு உலக முதலீட்டாளர்கள் மாநாடு கட்டியம் கூறுகிறது!

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிவு

காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாத காரணத்தால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிந்தது.

காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாள்களாக பெய்துவந்த மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வந்தது. இந்தநிலையில், வியாழக்கிழமை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை திடீரென நின்று போனது. இதன் காரணமாக வியாழக்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 6,086 கனஅடியாக வந்து கொண்டிருந்த நீர்வரத்து, வெள்ளிக்கிழமை காலை நொடிக்கு 4,370 கனஅடியாக சரிந்தது.

வெள்ளிக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 81.45 அடியாக இருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 15,800 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 43.41 டி.எம்.சியாக இருந்தது. இருப்பினும், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

### விதைச் சட்டங்களை மீறினால் கடும் நடவடிக்கை: வேளாண் அதிகாரி

விதைச் சட்டங்களை மீறும் விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விதை ஆய்வு துணை இயக்குநர் சி.கிருஷ்ணகுமாரி தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:தூத்துக்குடி மாவட்டத்தில் பருவமழை பெய்து விவசாயப் பணிகள் தொடங்கிவிட்ட நிலையில், விற்பனை நிலையங்களில் மக்காச்சோளம், சோளம், கம்பு, பருத்தி, பயறு வகை விதைகள் இருப்பில் உள்ளன.இவற்றில் விதை ஆய்வு பிரிவின் மூலம் 659 விதை மாதிரிகள் இப்பருவத்தில் சேகரிக்கப்பட்டு தர ஆய்வு நடைபெற்று வருகிறது. விவசாயிகள், விதைகளை வாங்கும்போது விற்பனைப் பட்டியல் அல்லது ரசீதை கேட்டு வாங்க வேண்டும். விதையின் காலாவதி நாள், பயிரிட ஏற்ற பருவம் மற்றும் பகுதி ஆகிய விவரங்களை கவனிக்க வேண்டும். சான்றுபெற்ற தரமான விதைகளையேப் பயன்படுத்த வேண்டும்.

விதை விற்பனையாளர் விதை விவரப் பலகையை பார்வையில் படும்படி வைத்திருக்க வேண்டும். விற்பனைப் பட்டியலில் விவசாயியின் முழு முகவரி, செல்லிடப்பேசி எண், குவியல் எண் விவரங்களைக் குறிப்பிட்டு விவசாயியிடம் கையொப்பம் பெற்றுக்கொள்ள வேண்டும். கூடுதல் விலைக்கு விதைகளை விற்கக்கூடாது. விதைச் சட்டங்களை மீறும் விற்பனையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இருப்பு விவரம்: மாவட்டத்தில் தற்போது தனியார் விதைக் கடைகளில் மானாவாரிக்கு ஏற்ற கே-8 15 மெட்ரிக் டன், வீரிய ஒட்டு ரக சோளம் சுமார் 16 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது.

மேலும், மக்காச்சோளம் வீரிய ஒட்டு ரகம் சுமார் 40 மெட்ரிக் டன், வீரிய ஒட்டு ரக பருத்தி (பி.டி. பருத்தி) சுமார் 5 மெட்ரிக் டன், பயறு வகைகள் சுமார் 26 மெட்ரிக் டன் விதைகள் இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதர வீரிய ஒட்டு ரக சோளங்களை வாங்கி பயிரிட விவசாயிகள் முன்வர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு வானிலை மையம் தகவல்**




சென்னை,

தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களில் இன்று(சனிக்கிழமை) இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெப்பச்சலனம்

தமிழ்நாட்டில் வெப்பச்சலனம் காரணமாக கடந்த சில தினங்களாகவே நல்ல மழைபெய்து வருகிறது. ஆனால் அதே சமயம் தென்மேற்கு பருவமழை கர்நாடகத்தின் வடக்கு பகுதியிலும், ஆந்திரா, கேரளா ஆகிய இடங்களிலும் தீவிரம் அடைந்துள்ளது.

இந்தநிலையில் அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் நிலவும் வானிலை குறித்து சென்னை வானிலை மைய ஆராய்ச்சி அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

தமிழகத்தில் வெப்பச்சலனம் காரணமாக கடந்த சில தினங்களாகவே நல்ல மழைபெய்து வருகிறது. அதிலும் குறிப்பாக கடந்த ஒரு வாரமாக நல்ல மழை பெய்துள்ளது. ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான காலக்கட்டங்களில் தமிழகத்தில் 32 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகி இருக்க வேண்டும். ஆனால் தற்போது இயல்பு நிலையை விட 4 சதவீதம் குறைவாகவே மழைப்பொழிவு பதிவாகி இருக்கிறது.

இடியுடன் கூடிய மழை

அடுத்த 24 மணி நேரத்தை பொறுத்தவரையில், (இன்று) தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களில் மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு இருக்கிறது. சென்னையை பொறுத்தவரையில், மாலை நேரங்களில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் 3 செ.மீ., கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடி, இரணியல், நாகர்கோவில், குளச்சல், விழுப்புரம் மாவட்டம் ஆகிய இடங்களில் தலா 2 செ.மீ., கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை, தக்கலை, பேச்சிப்பாறை, திண்டுக்கல் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம் எண்ணூர், கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்சட்டி, புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## 15 ஆயிரம் டன் பருப்பு இறக்குமதி: மத்திய அரசு நடவடிக்கை



புதுடெல்லி,

இந்தியாவில் பெரும்பாலான பருப்பு வகைகள் அனைத்தும் கிலோ ரூ.100-க்கு மேல் உயர்ந்துவிட்டது. துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவை அதிகபட்சமாக கிலோ ரூ.155 வரை விற்கிறது. இதனால் பருப்பு விலையை கட்டுப்படுத்துவது தொடர்பாக மத்திய அரசு அதிகாரிகளின் உயர்மட்டக்குழு கூட்டம் நடந்தது.

இந்த கூட்டத்தில், துவரம் பருப்பு கூடுதலாக 5 ஆயிரம் டன் இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டது. ஏற்கனவே 10 ஆயிரம் டன் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவை வெளிநாடுகளில் இருந்து வந்து கொண்டு உள்ளது. இதில் முதல்கட்ட சரக்குகள் இந்த மாதம் 23-ந் தேதி இந்தியா வந்துசேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தகவலை மத்திய நுகர்வோர் நலத்துறை செயலாளர் சி.விஸ்வநாத் தெரிவித்துள்ளார்.

## அன்னங்கோவில் மீன்ஏலம் விடும் தளத்தில் மத்திமீன்கள் விலை கிடுகிடு உயர்வு



பரங்கிப்பேட்டை,

அன்னங்கோவில் மீன் ஏலம் விடும் தளத்தில் மத்தி மீன்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

<u>வரத்து குறைந்தது</u>

பரங்கிப்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள சாமியார்பேட்டை, புதுக்குப்பம், எம்.ஜி.ஆர்.திட்டு, அன்னங்கோவில், முடசல் ஓடை உள்பட 50–க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் படகு மூலம் மீன் பிடிக்க கடலுக்கு சென்றனர். இதில் மீனவர்கள் வலையில் குறைந்த அளவிலேயே மத்தி மீன்கள் சிக்கியது. இதையடுத்து பிடிபட்ட மீன்களை மீனவர்கள் நேற்று அன்னங்கோவிலில் உள்ள மீன்ஏலம் விடும் தளத்திற்கு விற்பனைக்காக கொண்டு வந்தனர்.

இதைத்தொடர்ந்து கேரளா மற்றும் கடலூர் மாவட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் மீன்களை போட்டிப்போட்டு வாங்கி சென்றனர்.

இது குறித்து மீனவர் ஒருவர் கூறியதாவது:– கடந்த மாதம் எங்களது வலையில் சுமார் 200 டன் அளவிற்கு மீன்கள் சிக்கியது. அதனால் அப்போது எங்களுக்கு நல்ல வருமானம் கிடைத்தது. ஆனால் தற்போது 10 முதல் 30 டன் அளவிற்கு மட்டுமே மீன்கள் கிடைத்து வருகிறது.

கவலை

வரத்து குறைந்ததால் கடந்த மாதம் ரூ. ஆயிரத்திற்கு விற்பனையான 60 கிலோ கொண்ட ஒரு பெட்டி மீன்கள், தற்போது ரூ.2 ஆயிரத்திற்கு விற்பனையாகி வருகிறது. மீன்களின் விலை கிடு கிடு வென உயர்ந்தாலும் எங்களுக்கு போதிய அளவிற்கு வருமானம் கிடைக்கவில்லை. இதன் காரணமாக மீன்வர்கள் அனைவரும் பெரும் கவலை அடைந்துள்ளனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## விலை உயர்வை கட்டுப்படுத்த 15 ஆயிரம் டன் பருப்பு இறக்குமதி மத்திய அரசு நடவடிக்கை



புதுடெல்லி,

இந்தியாவில் பெரும்பாலான பருப்பு வகைகள் அனைத்தும் கிலோ ரூ.100க்கு மேல் உயர்ந்துவிட்டது. துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவை அதிகபட்சமாக கிலோ ரூ.155 வரை விற்கிறது. இதனால் பருப்பு விலையை கட்டுப்படுத்துவது தொடர்பாக மத்திய அரசு அதிகாரிகளின் உயர்மட்டக்குழு கூட்டம் நேற்று நடந்தது.

இந்த கூட்டத்தில், துவரம் பருப்பு கூடுதலாக 5 ஆயிரம் டன் இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டது. ஏற்கனவே 10 ஆயிரம் டன் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவை வெளிநாடுகளில் இருந்து வந்து கொண்டு உள்ளது. இதில் முதல்கட்ட சரக்குகள் இந்த மாதம் 23–ந் தேதி இந்தியா வந்துசேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தகவலை மத்திய நுகர்வோர் நலத்துறை செயலாளர் சி.விஸ்வநாத் தெரிவித்துள்ளார்.

## வேளாண்மைத்துறை திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடந்தது



கிருஷ்ணகிரியில் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடந்தது.

ஆய்வுக்கூட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் கலெக்டர் ராஜேஷ் பேசியதாவது:-

வேளாண்மை மற்றும் அதன் இதர துறைகளில் செயல்படுத்தப்படும் புதிய தொழில் நுட்பங்களை அட்மா திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு விவசாயிகளின் வயல்களில் முழுவதுமாக

செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு அறுவடையின் பின் செய் நேர்த்தி, மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு மற்றும் வண்ண மீன்கள் வளர்ப்பு குறித்து பயிற்சி ஆகியவை நடத்தப்படுகிறது.

வேண்டுகோள்

இதை விவசாயிகள் முழுவதுமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நெல் நடவு எந்திரம் மூலம் நடவு செய்தல், ராகி மற்றும் நிலக்கடலை பயிர்களை நவீன விதைப்பு கருவி மூலம் விதைப்பு செய்தல், துவரை நாற்று நடவு மற்றும் இயற்கை வேளாண்மை போன்ற நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் அதற்கான மானியங்களை பெற விவசாயிகள் வேளாண்மைத்துறையை தொடர்பு கொண்டு திட்டங்கள் மற்றும் தொழில் நுட்பங்களை செயல்படுத்திட வேண்டும். இவ்வாறு கலெக்டர் ராஜேஷ் கூறினார். இந்த கூட்டத்தில் வேளாண்மை துறை இணை இயக்குனர் சபாநடேசன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) சுமதி, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் வேணுகோபால், வேளாண்மை துணை இயக்குனர் (உழவர் பயிற்சி நிலையம்) ரவி, வேளாண்மை துணை இயக்குனர் ரவீந்தர், வேளாண் வணிக துணை இயக்குனர் காளியப்பன், தோட்டக்கலை துணை இயக்குனர் (பொறுப்பு) நர்குந்த் மற்றும் விவசாய சங்க தலைவர்கள் ராமகவுண்டர், தாசப்பா மற்றும் லோகபிராம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கூடலூரில் 60 கிலோ இஞ்சி மூடை ரூ.800–க்கு விற்பனை விவசாயிகள் கவலை



கூடலூரில் 60 கிலோ எடையுள்ள இஞ்சி மூடை ரூ.800–க்கு விற்பனையாவதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

இஞ்சி நடவு

கூடலூர் மற்றும் வயநாடு பகுதியில் காபி, இஞ்சி, ஏலக்காய் உள்ளிட்ட பணப்பயிர்கள் விளைவிக்கப்படுகிறது. இந்த நிலையில் மே மாதம் பருவமழை பெய்ததால் பல ஆயிரம் ஏக்கர் கணக்கில் இஞ்சி நடவு செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டனர்.

கடந்த ஆண்டு இஞ்சிக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. இதேபோல் கடந்த ஜூன் மாதம் வரை 60 கிலோ எடையுள்ள ஒரு மூடை ரூ.5 ஆயிரத்து 300 வரை விலை போனது. இதனால் தேயிலைக்கு போதிய விலை கிடைக்காமல் உள்ளதால் விவசாயிகள் இஞ்சி மீது கவனத்தை திருப்பினர்.

ரூ.800–க்கு விற்பனை

தற்போது இஞ்சி விலை அதலபாதாளத்துக்கு செல்லும் வகையில் 60 கிலோ மூடை ரூ.800–க்கு விற்பனையாகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். கடந்த 2011–12–ம் ஆண்டு 60 கிலோ இஞ்சி ரூ.350–க்கு விற்பனையானது. இதனால் வயநாடு மாவட்டம், கூடலூர் பகுதி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர்.

இது குறித்து கூடலூர் விவசாயிகள் கூறியதாவது:– கடந்த 2011–12–ம் ஆண்டு இஞ்சி விலை அடியோடு சரிந்தது. இதனால் வயநாடு மாவட்டத்தில் விவசாயிகள் பலர் தற்கொலை செய்து கொண்டனர். கடந்த ஜூன் மாதம் வரை 60 கிலோ இஞ்சி ரூ.5 ஆயிரத்து 300 ஆக கிடைத்தது. ஆகஸ்ட் மாதம் ரூ.2 ஆயிரத்து 500 ஆக குறைந்தது.

<u>நிவாரண உதவி வழங்க கோரிக்கை</u>

தற்போது அதலபாதாளத்துக்கு செல்லும் வகையில் ரூ.800 ஆக விலை உள்ளது. இதனால் இஞ்சி விவசாயத்தில் மிகுந்த நஷ்டத்தை சந்திக்க வேண்டிய சூழல் உருவாகும் நிலை ஏற்பட்டு உள்ளது. இதேபோல் வேர் அழுகல் நோய், விலை இல்லாமை, கர்நாடகாவில் இருந்து அதிகளவு இஞ்சி இறக்குமதி உள்ளிட்ட காரணங்களால் கூடலூர், வயநாடு விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். எனவே மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு நிவாரண உதவி வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## சம்பா நெல் பருவத்தில் நவீன தொழில்நுட்ப முறையை கையாளும் விவசாயிகளுக்கு மானியம்




விழுப்புரம்,

சம்பா நெல் பருவத்தில் நவீன தொழில்நுட்ப முறையை கையாளும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட உள்ளதாக வேளாண் உதவி இயக்குனர் இளவரசன் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு மானியம்


தமிழக அரசு வேளாண்மைத்துறை மூலம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கவும், சாகுபடி செலவை குறைத்து அதிக மகசூலும், அதிக வருமானமும் பெறுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விவசாயிகள் பழைய சாகுபடி முறையில் நெல் நடவு செய்வதற்கு பதிலாக ஒரு சென்ட் நாற்றங்காலில் 14 நாட்கள் வயதுடைய பாய் நாற்றங்காலில் தயாரிக்கப்பட்ட நெல் நாற்றுகளை திருந்திய நெல் சாகுபடி முறையான எந்திரத்தின் மூலம் நெல் நடவு செய்யும் தொழில்நுட்ப முறை தற்போது சம்பா பருவத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அவ்வாறு எந்திரத்தின் மூலம் பாய் நாற்றங்காலில் உருவாக்கப்பட்ட 14 நாட்கள் வயதுடைய நாற்றுகளை எந்திரத்தின் மூலம் வரிசையில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.1,600 வீதம் பின்னிட்ட மானியமாக அதிகபட்சம் 5 ஏக்கர் வரை விவசாயிகளின் வங்கி கணக்கில் சேர்க்கப்படும்.

இந்த எந்திரத்தின் மூலம் நெல் சாகுபடி செய்யும் திட்டத்தில் விருப்பம் உள்ள விவசாயிகள் அந்தந்த பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். இந்த தகவலை வேளாண் உதவி இயக்குனர் இளவரசன் தெரிவித்துள்ளார்.

தினகரன்

**நீர் ஆதாரங்களில் தண்ணீர் குறைந்தது**



புதுடெல்லி: நாடு முழுவதும் கடந்த ஆண்டைக்காட்டிலும் 85 முக்கிய நீர்தேங்கங்களில் தண்ணீரின் அளவு குறைந்துள்ளது. நாடு முழுவதும் 91 நீர்நிலைகளை மத்திய நீர்வள ஆணையம் கண்காணித்து வருகிறது. இந்த நீர் ஆதாரங்கள் மூலமாக, 59 சதவீத தண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. இவைகளில் கடந்த ஆண்டு 81 சதவீதமாக இருந்த தண்ணீரின் அளவு, இந்த ஆண்டில் 77 சதவீதமாக குறைந்துள்ளது. எனினும், இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தானில் உள்ள நீர்நிலைகளில் தண்ணீரின் அளவு கணிசமாக உயர்ந்துள்ளது.

**வதோதராவில் சிலைகள் பூங்கா**




வதோதரா: குஜராத் மாநிலம் வதோதராவில் சிலைகள் பூங்கா அமைக்க, வதோதரா மாநகராட்சி முடிவு செய்துள்ளது. மாநகராட்சி நிலைக்குழு தலைவர் ஹிதேந்திர படேல் கூறுகையில், உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கும் வகையில், சயாஜி பாக்கில் இந்த பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் அமைக்கப்பட உள்ள சிலைகள், வதோதராவைச் சேர்ந்த கலை நிபுணர் ஒருவரால் வழங்கப்பட உள்ளது. சயாஜி பாக் 113 ஏக்கரில் பரந்து விரிந்துள்ளது. சிலைகள் பூங்கா, வெளிநாடுகளில் மிகப் புகழ்பெற்றதாகும் என்றார்

**கருவேல மரங்களை அகற்றக்கோரி வழக்கு அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு**




மதுரை: உயர் நீதிமன்ற உத்தரவுப்படி தமிழகத்தில் கருவேல மரங்களை அகற்ற அரசுக்கு ஆணையிட கோரி ஐகோர்ட் மதுரை கிளையில், மதிமுக பொதுச்செயலாளர் வைகோ மனுதாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதிகள் ஆர்.சுதாகர், வி.எம்.வேலுமணி ஆகியோர் முன் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது வைகோ ஆஜராகி வாதாடினார். 'கேரளாவில் கருவேல மரங்களை வளர்க்க யாரும் அனுமதிப்பதில்லை. கருவேல மரங்களை தொழில்நுட்ப ரீதியாக வேரோடு அகற்றி, இயற்கையையும், விவசாயத்தையும் பாதுகாக்கின்றனர். நான் அனுப்பிய மனுவிற்கு விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர்கள் மட்டுமே பதிலளித்தனர் என்றார்.

தொழில்நுட்ப ரீதியாக கருவேல மரங்களை அகற்ற இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தற்போதைய அறிக்கையை தமிழக அரசு மற்றும் 13 மாவட்ட கலெக்டர்கள் தாக்கல் செய்ய வேண்டும். கருவேல மரங்களை வேரோடு அகற்றி, இனிமேல் வளராத விதம் ஏதேனும் திட்டம் இருந்தால் மனுதாரர் தெரிவித்து, நீதிமன்றத்திற்கு உதவலாம், எனக் கூறிய நீதிபதிகள், விசாரணையை அக். 6க்கு தள்ளி வைத்தனர்.

**தினசரி மீன் உண்பவர்களுக்கு மன அழுத்தம் குறையும்: சீன ஆய்வில் தகவல்**



பீஜிங்: மீன்களை தினசரி உணவில் சேர்த்துக் கொள்வோருக்கு மன அழுத்தம் குறையும், அதிலும் ஆண்களுக்கு வெகுவாக குறையும் என சமீபத்திய ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. சீனாவின் கிழக்கில் உள்ள ஷாண்டோன்ங் மாகாணத்தில் இருக்கும் க்விங்டாவ் பல்கலைக்கழக மருத்துவ கல்லூரியின் ஆய்வுக் குழு தினசரி உணவில் மீன் உண்ணும் சுமார் ஒன்றரை லட்சம் மக்களைக் கொண்டு ஆய்வு நடத்தியது. அவர்களின் ஆரோக்கியம் தொடர்பான புள்ளிவிவரங்கள் அடங்கிய 2001-2014-ம் ஆண்டுகளுக்குள் உள்ள பட்டியலை ஆய்வு செய்ததில், அவர்களின் மன அழுத்தம் குறைந்திருப்பது தெரியவந்துள்ளது.

மீனில் இருக்கும் ஒமேகா 3 என்ற கொழுப்பு அமிலம் இவ்வகையில் மன அழுத்தத்தை குறைப்பதாக இந்த முதல் நிலை ஆய்வின் மூலம் தெரிகிறது. இது மூளையில் உருவாகும் வேதிப்பொருளில் மாற்றத்தை ஏற்படுத்துவதால் இவ்வாறு ஏற்படுவதாக தெரியவந்துள்ளது. மீன் எண்ணெய் உட்பட பலவகை மீன்களில் அதனை வறுத்தோ, வேக வைத்தோ உண்ணும்போது, இந்த ஒமேகா 3 கொழுப்பு அமிலம் நமது உடலுக்கு கிடைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருப்பு விலையை கட்டுப்படுத்த மேலும் 5,000 டன் இறக்குமதி



புதுடெல்லி: விலையை கட்டுப்படுத்த மேலும் 5,000 டன் பருப்பு இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. வெங்காயத்தை போலவே பருப்பு வகைகள் விலையும் உச்சத்துக்கு சென்றுள்ளது. இதை கட்டுப்படுத்த நுகர்வோர் விவகாரத்துறை செயலாளர் சி.விஸ்வநாத் தலைமையில் நேற்று உயர்மட்ட குழு கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. இதில், உள்நாட்டு சந்தையில் பருப்பு விலையை கட்டுப்படுத்த மேலும் 5,000 டன் பருப்பு வகைகள் இறக்குமதி செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நுகர்வோர் விவகாரத்துறை செயலாளர் சி.விஸ்வநாத் கூறுகையில், உள்நாட்டு தேவையை ஈடு செய்வதற்காக வெளிநாடுகளில் இருந்து கூடுதலாக 5,000 டன் துவரம்பருப்பு இறக்குமதி செய்ய இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுளளது. இதனால் சந்தையில் பருப்பு விலை கட்டுக்குள் வரும் என்று எதிர்பார்க்கலாம் என்றார். இந்த குழு இந்திய உலோகம் மற்றும் கனிம வர்த்தக நிறுவனம், சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு, தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை

இணையங்கள் மாநிலங்களுடன் இணைந்து செயல்பட கேட்டுக்கொண்டுள்ளது. இந்திய உலோகம் மற்றும் கனிம வர்த்தக நிறுவனம் மூலம் 10,000 டன் பருப்பு வகைகளை இறக்குமதி செய்ய மத்திய அரசு ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளது. இதில் முதல் கட்டமாக வரும் 23ம் தேதி கன்டெய்னர்களில் உளுத்தம் பருப்பு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நுகர்வோர் விவகாரத்துறை உயர்மட்ட குழு வெங்காயம், பருப்பு வகைகள் மற்றும் அத்தியாவசிய உணவு பொருட்கள் விலையை கண்காணித்து வருகிறது. உள்நாட்டு உற்பத்தி குறைவு காரணமாக பருப்பு வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு கடந்த சில வாரங்களாகவே விலை அதிகரித்து வருகிறது. மத்திய அரசு புள்ளி விவரப்படி ஒரு கிலோ துவரம் பருப்பு சென்னையில் அதிகபட்சமாக ரூ. 145க்கு விற்கப்படுகிறது. மும்பை ரூ.135, டெல்லி, கொல்கத்தாவில் ரூ.132க்கு விற்கப்படுகிறது. இதுபோல் ஒரு கிலோ உளுத்தம் பருப்பு சென்னையில் ரூ.125, மும்பையில் ரூ.121, டெல்லியில் ரூ.112, கொல்கத்தாவில் ரூ.102க்கு விற்கப்படுகிறது என புள்ளி விவரம் தெரிவிக்கிறது. ஆனால், சென்னையில் சில்லரை விலையில் இதை விட அதிக விலைக்கே விற்கப்படுகிறது.

**தண்ணீர் பற்றாக்குறை மரவள்ளி பயிரிடுவதில் விவசாயிகள் தீவிரம்**

வானூர், : வானூர் தாலுகா பகுதியில் மழையளவு குறைந்ததால் நிலத்தடி நீர் ஆழமாக சென்றுவிட்டது. இதனால் விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மரவள்ளி பயிரை பெரும்பாலான விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் அமைத்து சாகுபடி செய்து வருகின்றனர். குறைந்த தண்ணீரில் மரவள்ளி வளரும் என்பதால் வானூர், புதுப்பாக்கம், நாராயணபுரம், ரங்கநாதபுரம் உள்ளிட்ட 10க்கும்

மேற்பட்ட கிராமங்களில் பெரும்பாலான விவசாயிகள் மரவள்ளியை பயிர் செய்துள்ளனர். மரவள்ளி 8 முதல் 10 மாதத்தில் அறுவடைக்கு வந்துவிடும். ஆனால் தற்போது சரியான விலை கிடைக்கவில்லை என்பதே விவசாயிகளின் கவலையாக உள்ளது. இருந்தபோதும் பயிர் செய்ய விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்களை கொடுத்து அரசு ஊக்கப்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### வேளாண்.பல்கலை மாணவர்களுக்கு உதவித்தொகை

கோவை, : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் பி.டெக்., உயிர்ெதாழில்நுட்பவியல் துறையின் நிேவதா, ராகவேந்திரன், காட்வின், அபிராமி, உத்ரா, வைஷ்ணவி சேகர் ஆகியோர் வெளிநாட்டில் பல்கலையில் மேல்படிப்புக்காக விண்ணப்பித்திருந்தனர். சர்வதேச அளவில், விண்ணப்பித்த பலரில், இவர்கள் கல்வி உதவித்தொகையோடு படிப்பதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பிரான்ஸ், தென்கொரியா, க்யூங்ஹீ பல்கலை, இஸ்ரோ, பென்-குரியன் பல்கலை மற்றும் சுவீடன், லூண்ட் பல்கலையில் படிப்பதற்கான வாய்ப்பை பெற்றுள்ளதாக வேளாண் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

### சான்று பெற்ற விதையை பயன்படுத்த வேண்டும்

திருச்சி, : விவசாயத்தில் அதிக மகசூல் பெற்று லாபம் குவித்திட சான்றுபெற்ற தரமான விதைகளையே பயன்படுத்த வேண்டும் என்று திருச்சி மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட கோவை விதைச் சான்று இணை இயக்குநர் அறிவுறுத்தினார். நடப்பு சம்பா பருவத்துவத்துக்குத் தேவையான சான்றுபெற்ற விதைகள் திருச்சி மாவட்டத்தில் உள்ள அரசு அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் விதை விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து கோவை விதைச்சான்று இணை இயக்குநர் பழனிச்சாமி ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர் கூறுகையில், விதைகள் சட்டம் 1966 (5) பிாிவின் படி மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட ரகங்களில் மட்டுமே சான்று விதை

உற்பத்தி செய்ய இயலும். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நெல் ரகங்களில் 10 ஆண்டுகளுக்கு உட்பட்ட நெல் ரகங்களுக்கு மட்டும் தமிழக அரசு ஊக்கத்தொகை வழங்குகிறது. இதன்படி, ஆடுதுறை- 49, சிஓ (ஆர்) 50, சிஓ (ஆர்) 51, திருச்சி- 3 ஆகிய ரகங்களில் விதை உற்பத்தி செய்ய வேண்டும். இதற்கான வல்லுநர் விதைகளை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுத்தருவதற்கு விதைச் சான்றுத் துறை மூலம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார். பின்னர், லால்குடி வட்டாரத்தில் மயில் அரங்கம் பகுதியைச் சேர்ந்த பிரிட்டோ யாகப்பன் வயலில் 3 ஏக்காரில் அமைக்கப்பட்டுள்ள சிஓ (ஆர்) 51 ஆதாரநிலை விதைப் பண்ணை, சேஷசமுத்திரம் ஐயப்பன் வயலில் 2 ஏக்காரில் அமைக்கப்பட்டுள்ள ஆடுதுறை-45 ஆதாரநிலை விதைப் பண்ணை, அபிஷேகபுரம் வெற்றிவேல் வயலில் 7 ஏக்காரில் அமைந்துள்ள ஆடுதுறை-36 சான்றுநிலை விதைப் பண்ணை ஆகியவற்றை பார்வையிட்டார். அப்போது அவர் கூறுகையில், விவசாயத்தில் அதிக மகசூல் பெற்று லாபம் குவித்திட சான்றுபெற்ற தரமான விதைகளையே பயன்படுத்த வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். பின்னர் வாளாடி வேளாண் விரிவாக்க மையத்தில் அமைந்துள்ள கைசுத்தி நிலையத்தைப் பார்வையிட்டார். ஆய்வின் போது விதைச்சான்று உதவி இயக்குநர் ரவி, விதைப் பாரிசோதனை அலுவலர் எழிலரசு, விதைச் சான்று அலுவலர்கள் சுரேஷ்குமார், ரங்கராஜன், உதவி விதை அலுவலர் கஸ்பார் ராஜ் ஆகியோர் உடன் சென்றனர்.

தின பூமி

## தமிழகத்தில் உணவு பதப்படுத்தல் தொழிலில் முதலீடு செய்ய ஏராளமான வாய்ப்புகள்: அமைச்சர் வைத்திலிங்கம் பேச்சு



சென்னை, தமிழகத்தில் உணவு பதப்படுத்துதல் தொழிலில் முதலீடு செய்ய ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக வேளாண்துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் கூறினார்.

உலக முதலீட்டாளர் மாநாட்டை ஒட்டி "தமிழகத்தில் வேளாண்மை மற்றும் உணவு பதப்படுத்துதல் துறையில் முதலீட்டு வாய்ப்புகள்" என்ற தலைப்பில் நேற்று கருத்தரங்கம் நடந்தது. இதில், தமிழக வேளாண் துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் பேசும்போது கூறியதாவது: -

விவசாயத்துக்கு பல்வேறு மானிய உதவிகளை அளித்து தமிழகத்தில் 2-வது பசுமை புரட்சி ஏற்பட வழிவகை செய்துள்ளார் முதல்வர்

ஜெயலலிதா. அவரது நடவடிக்கையின் காரணமாக, கடந்த 2014-15-ம் ஆண்டில் தமிழகத்தின் உணவு உற்பத்தி 127,95 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்தது. இதற்காக தேசிய அளவில் தமிழகத்துக்கு பல்வேறு விருதுகளும், பரிசுகளும் வழங்கப்பட்டன. சொட்டுநீர் பாசனத்துக்கு 100 சதவீதம் மானியம் அளிக்கும் ஒரே மாநிலம் தமிழகம்தான். சிறுதானியங்கள், வேர்க்கடலை உற்பத்தியில் முதலிடத்தையும், கரும்பு உற்பத்தியில் 2-ம் இடத்தையும் தமிழகம் வகிக்கிறது. தமிழகத்தில் உணவு பதப்படுத்துதல் துறையில் நிறைய வாய்ப்புகள் உள்ளன. அவற்றை முதலீட்டாளர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.இவ்வாறு அமைச்சர் வைத்திலிங்கம் கூறினார்.நபார்டு வங்கியின் முதன்மை தலைமை மேலாளர் கே.வெங்கடேஸ்வர ராவ் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது: -

தமிழகத்தில் இறைச்சி, கோழிக்கறி, கடல்சார் உணவுகள், மீன்கள் பதப்படுத்தல் தொழில்களுக்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. இத்துறையில் ரூ .5 ஆயிரம் கோடி முதல் ரூ .6 ஆயிரம் கோடி வரை முதலீட்டு வாய்ப்புகள் இருக்கின்றன.

உணவு பதப்படுத்தல் தொழில்களுக்கு ஏற்றுமதி-இறக்குமதி வங்கி உள்பட பல்வேறு வங்கிகள் நிதியுதவி செய்கின்றன. தேசிய தோடக்கலை வாரியம் உள்ளிட்ட அமைப்புகள் மானியங்கள் அளிக்கின்றன. தமிழகத்தில் குளிர்பதன கிடங்குகள் அதிகளவில் ஏற்படுத்தவேண்டும். இதற்கு ரூ .1500 கோடி முதல் ரூ .2 ஆயிரம் கோடி வரை முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன.

மிகப்பெரிய அளவிலான உணவு பூங்காக்கள் அமைப்பதற்கு மத்திய அரசு நிதி உதவி செய்கிறது. தமிழகத்தில் கிருஷ்ணகிரியிலும், விருதுநகரில் மிகப்பெரிய உணவு பூங்காக்கள் உள்ளன. உணவு பூங்காக்களை மேம்படுத்துவதற்கென மத்திய அரசு பிரத்யேக நிதியாக ரூ

.2 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. உணவு பதப்படுத்தல் தொழில்களுக்கு கடன்வழங்குமாறு அனைத்து வங்கிகளுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஏராளமான மகளிர் சுயஉதவிக்குழுக்கள் செயல்படுகின்றன. மகளிர் சுயஉதவிக்குழுக்களை பயன்படுத்தி ஆரம்ப அளவிலான உணவு பதப்படுத்தலில் கவனம் செலுத்தலாம். பின்னர் இதனை பெரிய அளவிலான உணவு பதப்படுத்தல் மையங்களுடன் இணைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் ராம் ராஜசேகரன் தமிழகத்தில் வேளாண் வர்த்தக வாய்ப்புகள் குறித்து பேசுகையில், உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி தொடர்பான மையத்தை தமிழகத்தில் தொடங்க தயாராக இருப்பதாக கூறினார்.டாபே நிறுவன தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி மல்லிகா சீனிவாசன், டான்பாஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவன தலைவர் பி.ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் பேசினார். இந்த கருத்தரங்கை தமிழக அரசின் வேளாண்துறை செயலாளர் ராஜேஷ் லக்கானி வழிநடத்தினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## உணவு உற்பத்தி இந்த ஆண்டு அதிகரிக்கும்: அருண் ஜேட்லி நம்பிக்கை_




நடப்பாண்டில் நாட்டின் உணவு உற்பத்தி கடந்த ஆண்டைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் என்று மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டை விட தற்போது பருவ மழை குறைவாக பெய்த போதிலும் உற்பத்தி அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசுக்குக் கிடைத்த தகவலின் படி நடப்பாண்டில் விதைப்பு அதி கரித்துள்ளது. இது கடந்த ஆண்டை விட அதிகமாக இருப்பதால் உற்பத்தியும் அதிகரிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். எந்த அளவுக்கு அதிகமாக இருக்கும் என்பதை இப்போதே துல்லியமாகக் கணித்துக் கூற முடியாது என்று அவர் கூறினார். அறுவடை முடிந்த பிறகே சரியான புள்ளி விவர தகவலைத் தர முடியும் என்று அவர் கூறினார்.

ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்பதற் காக கேரள மாநிலத்துக்கு வந் திருந்த அவர், மழையளவு குறை வாக இருந்தபோதிலும் விளைச்சல் அதிகரித்து உற்பத்தி அதிகமாக இருக்கும் என்று கூறினார்.

பருவ மழை குறையும் என வானிலை தகவல் பற்றி கேட்டதற்கு, இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் ஓரளவு கணிசமாக மழை பெய்துள்ளது. ஆனால் ஆகஸ்ட் மாதத்தில் இது ஓரளவு குறைவாக இருந்தது. செப்டம்பர் மாதத்தில் மழையளவு திருப்திகரமாக இல்லை. இருப்பினும்

கடந்த சில தினங்களாக மழை பெய்வது நம்பிக்கையை அளித்துள்ளது என்று ஜேட்லி குறிப்பிட்டார்.

பருவ மழை குறித்த வானிலை தகவல் அனைத்துமே முன்கூட்டிய கணிப்புதான். ஆனால் இந்த சீசனில் எவ்வளவு மழை பெய்தது என்ற விவரம் சீசன் முடிந்த பிறகுதான் தெரியவரும். இருந்தாலும் அது வழக்கமான அளவை விடக் குறைவாகத்தான் இருக்கும் என்று ஜேட்லி குறிப்பிட்டார்.

## தமிழகத்தில் உணவு பதப்படுத்தல் தொழிலில் முதலீடு செய்ய வாய்ப்புகள் ஏராளம்: வேளாண்துறை அமைச்சர் வைத்திலிங்கம் பேச்சு




தமிழகத்தில் உணவு பதப்படுத் துதல் தொழிலில் முதலீடு செய்ய ஏராளமான வாய்ப்புகள் உள்ள தாக வேளாண்துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் கூறினார்.

உலக முதலீட்டாளர் மாநாட்டை ஒட்டி "தமிழகத்தில் வேளாண்மை மற்றும் உணவு பதப்படுத்துதல் துறையில் முதலீட்டு வாய்ப்புகள்" என்ற தலைப்பில் நேற்று கருத்தரங்கம் நடந்தது. இதில், தமிழக வேளாண் துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் பேசும்போது கூறியதாவது:-

விவசாயத்துக்கு பல்வேறு மானிய உதவிகளை அளித்து தமிழகத்தில் 2-வது பசுமை புரட்சி ஏற்பட வழிவகை செய்துள்ளார் முதல்வர்

ஜெயலலிதா. அவரது நடவடிக்கையின் காரணமாக, கடந்த 2014-15ம் ஆண்டில் தமிழகத்தின் உணவு உற்பத்தி 127.95 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. இதற்காக தேசிய அளவில் தமிழகத்துக்கு பல்வேறு விருதுகளும், பரிசுகளும் வழங்கப்பட்டன.

**சொட்டுநீர் பாசன மானியம்**

சொட்டுநீர் பாசனத்துக்கு 100 சதவீதம் மானியம் அளிக்கும் ஒரே மாநிலம் தமிழகம்தான். சிறுதானியங்கள், வேர்க்கடலை உற்பத்தியில் முதலிடத்தையும், கரும்பு உற்பத்தியில் 2-ம் இடத்தையும் தமிழகம் வகிக்கிறது. தமிழகத்தில் உணவு பதப்படுத்துதல் துறையில் நிறைய வாய்ப்புகள் உள்ளன. அவற்றை முதலீட்டாளர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு அமைச்சர் வைத்திலிங்கம் கூறினார்.

நபார்டு வங்கியின் முதன்மை தலைமை மேலாளர் கே.வெங்கடேஸ்வர ராவ் சிறப்புரையாற்றினார். அவர் பேசியபோது தமிழகத்தில் இறைச்சி, கோழிக்கறி, கடல் சார் உணவுகள், மீன்கள் பதப் படுத்தல் தொழில்களுக்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. இத்துறையில் ரூ.5 ஆயிரம் கோடி முதல் ரூ.6 ஆயிரம் கோடி வரை முதலீட்டு வாய்ப்புகள் இருக்கின்றன.

உணவு பதப்படுத்தல் தொழில் களுக்கு ஏற்றுமதி-இறக்குமதி வங்கி உள்பட பல்வேறு வங்கிகள் நிதியுதவி செய்கின்றன. தேசிய தோட்டக் கலை வாரியம் உள்ளிட்ட அமைப்புகள் மானியங்கள் அளிக் கின்றன.

தமிழகத்தில் குளிர்பதன கிடங்குகள் அதிகளவில் ஏற்படுத்த வேண்டும். இதற்கு ரூ.1,500 கோடி முதல் ரூ.2 ஆயிரம் கோடி வரை முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன.

**உணவு பூங்கா**

மிகப்பெரிய அளவிலான உணவு பூங்காக்கள் அமைப் பதற்கு மத்திய அரசு நிதி உதவி செய்கிறது. தமிழகத்தில் கிருஷ்ணகிரியிலும்,

விருதுநகரில் மிகப்பெரிய உணவு பூங்காக்கள் உள்ளன. உணவு பூங்காக்களை மேம்படுத்துவதற்கென மத்திய அரசு பிரத்யேக நிதியாக ரூ.2 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. உணவு பதப்படுத்தல் தொழில்களுக்கு கடன் வழங்குமாறு அனைத்து வங்கிகளுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஏராளமான மகளிர் சுய உதவிக்குழுக்கள் செயல்படுகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்களை பயன்படுத்தி ஆரம்ப அளவிலான உணவு பதப்படுத்தலில் கவனம் செலுத்தலாம். பின்னர் இதனை பெரிய அளவிலான உணவு பதப்படுத்தல் மையங்களுடன் இணைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் ராம் ராஜசேகரன் தமிழகத்தில் வேளாண் வர்த்தக வாய்ப்புகள் குறித்து பேசுகையில், உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி தொடர் பான மையத்தை தமிழகத்தில் தொடங்க தயாராக இருப்பதாக கூறினார்.

டாபே நிறுவன தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி மல்லிகா சீனிவாசன், டான்பாஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவன தலைவர் பி.ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் பேசினார். இந்த கருத்தரங்கை தமிழக அரசின் வேளாண்துறை செயலாளர் ராஜேஷ் லக்கானி வழிநடத்தினார்._

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு: வானிலை மையம் தகவல்**




சென்னை, செப்.12-

தமிழ்நாட்டில் வெப்பச்சலனம் காரணமாக கடந்த சில தினங்களாகவே நல்ல மழைபெய்து வருகிறது. ஆனால் அதே சமயம் தென்மேற்கு பருவமழை கர்நாடகத்தின் வடக்கு பகுதியிலும், ஆந்திரா, கேரளா ஆகிய இடங்களிலும் தீவிரம் அடைந்துள்ளது.

இந்தநிலையில் அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் நிலவும் வானிலை குறித்து சென்னை வானிலை மைய ஆராய்ச்சி அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

தமிழகத்தில் வெப்பச்சலனம் காரணமாக கடந்த சில தினங்களாகவே நல்ல மழைபெய்து வருகிறது. அதிலும் குறிப்பாக கடந்த ஒரு வாரமாக நல்ல மழை பெய்துள்ளது. ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான காலக்கட்டங்களில் தமிழகத்தில் 32 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகி இருக்க வேண்டும். ஆனால் தற்போது இயல்பு நிலையை விட 4 சதவீதம்

குறைவாகவே மழைப்பொழிவு பதிவாகி இருக்கிறது.

அடுத்த 24 மணி நேரத்தை பொறுத்தவரையில், (இன்று) தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களில் மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு இருக்கிறது. சென்னையை பொறுத்தவரையில், மாலை நேரங்களில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் 3 செ.மீ., கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடி, இரணியல், நாகர்கோவில், குளச்சல், விழுப்புரம் மாவட்டம் ஆகிய இடங்களில் தலா 2 செ.மீ., கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை, தக்கலை, பேச்சிப்பாறை, திண்டுக்கல் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம் எண்ணூர், கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்சட்டி, புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## விலை உயர்வை கட்டுப்படுத்த 15 ஆயிரம் டன் பருப்பு இறக்குமதி: மத்திய அரசு நடவடிக்கை



புதுடெல்லி, செப்.12-

இந்தியாவில் பெரும்பாலான பருப்பு வகைகள் அனைத்தும் கிலோ ரூ.100-க்கு மேல் உயர்ந்துவிட்டது. துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவை அதிகபட்சமாக கிலோ ரூ.155 வரை விற்கிறது. இதனால் பருப்பு விலையை கட்டுப்படுத்துவது தொடர்பாக மத்திய அரசு அதிகாரிகளின் உயர்மட்டக்குழு கூட்டம் நேற்று நடந்தது.

இந்த கூட்டத்தில், துவரம் பருப்பு கூடுதலாக 5 ஆயிரம் டன் இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டது. ஏற்கனவே 10 ஆயிரம் டன் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு ஆகியவை வெளிநாடுகளில் இருந்து வந்து கொண்டு உள்ளது. இதில் முதல்கட்ட சரக்குகள் இந்த மாதம் 23-ந் தேதி இந்தியா வந்துசேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தகவலை மத்திய நுகர்வோர் நலத்துறை செயலாளர் சி.விஸ்வநாத் தெரிவித்துள்ளார்.

## திருச்சி மத்திய சிறையில் கைதிகள் உற்பத்தி செய்த சின்ன வெங்காயம் குறைந்த விலையில் விற்பனை



திருச்சி,செப்.12–

திருச்சி மத்திய சிறையில் தண்டனைக்கைதிகள், விசாரணைக்கைதிகள் என 1500–க்கும் மேற்பட்டோர் அடைக்கப்பட்டுள்ளனர்.

மன உளைச்சலை போக்கும் வகையில் சிறைக்கைதிகள் சிறை வளாகத்தில் உள்ள சுமார் 70 ஏக்கர் நிலத்தில் மா, வாழை, வெண்டைக்காய், கொத்தவரை, கத்திரிக்காய், தக்காளி,பச்சை மிளகாய், புடலங்காய், பீர்க்கங்காய்,சுரைக்காய், பாகற்காய், முள்ளங்கி மற்றும் கீரை வகைகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

இதில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தற்போது வெளிச்சந்தைகளில் பெரிய வெங்காயத்திற்கு உள்ள தட்டுப்பாட்டால் சின்ன வெங்காயத்திற்கு நல்ல விலை கிடைக்கிறது. இதையடுத்து சிறைவளாகத்தில் பயிரிடப்பட்டுள்ள சின்ன வெங்காயத்தை அறுவடை செய்யும் பணியில் கைதிகள் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து சிறை கண்காணிப்பாளர் முருகேசன் கூறுகையில், சிறை வளாகத்தில் 5 கட்டமாக பிரித்து வெங்காயம் பயிரிடப்பட்டு வருகிறது.

இதனால் எல்லா நாட்களிலும் வெங்காயம் கிடைப்பதால் நல்ல லாபம் ஈட்ட முடிகிறது. தற்போது 20– சென்ட் நிலத்தில் இருந்து 500 கிலோ வரை சின்ன வெங்காயம் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

இந்த முதல் தர வெங்காயத்தை வெளிச்சந்தையின் விலையை விட மிக குறைவான விலையில் சிறை முன்புள்ள பிரிசன் பஜாரில் வைத்து விற்பனை செய்கிறோம், இதனை பொது மக்கள் வாங்கி பயன் அடையலாம். இதில் கிடைக்கும் வருவாயின் ஒரு பகுதியை கைதிகளுக்கு பிரித்து அளிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## குமரியில் மழை நீடிப்பு: பேச்சிப்பாறை அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



நாகர்கோவில், செப். 12–

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கொட்டி தீர்த்த கனமழை மாவட்டம் முழுவதும் குளிர வைத்தது.

அடையாமடை, கோழிப்போர்விளை, குருந்தன்கோடு, குளச்சல், நாகர்கோவில், புத்தன் அணை, முள்ளங்கினா விளை பகுதிகளில் பரவலாக நேற்றும் சாரல் மழை பெய்தது. அடையாமடையில் அதிகபட்சமாக 27 மி.மீ. மழை பதிவானது.

திற்பரப்பு அருவியில் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இன்று விடுமுறை தினம் என்பதால் அருவியில் குளிப்பதற்கு காலை முதலே சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதியது.

ஆறுகளிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் பாசன குளங்கள் வேகமாக நிரம்பி வருகிறது. 640 குளங்கள் முழு கொள்ளளவை எட்டி உள்ளது. 850 குளங்கள் 75 சதவீதமும், 310 குளங்கள் 50 சதவீதமும், 210 குளங்கள் 25 சதவீதமும் நிரம்பி உள்ளது.

மலையோர பகுதியான பாலமோர் பகுதியில் பெய்து வரும் பலத்த மழையினால் பேச்சிப்பாறை அணைக்கு வரக்கூடிய நீர்வரத்து அதிகரித்துள்ளது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 36.75 அடியை எட்டி உள்ளது. அணைக்கு வினாடிக்கு 775 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 456 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

பெருஞ்சாணி அணை நீர் மட்டம் 60.28 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 283 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நாகர்கோவில் நகருக்கு குடிநீர் சப்ளை செய்யப்படும் முக்கடல் அணையின் நீர் மட்டம் 20.40 அடியை எட்டி உள்ளது.

பழையாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் வடக்கு தாமரைகுளம் பகுதியில் அறுவடைக்கு தயாரான நெற்பயிர்களை வெள்ளம் சூழ்ந்து இருந்தது. சற்று மழை குறைந்துள்ளதால் நெற்பயிர்களை சூழ்ந்த வெள்ளம் வடிய தொடங்கி உள்ளது.

காட்டாத்துறை, அமராவதி விளை, குலசேகரம் எம்.ஜி.ஆர். நகர், பாகோடு அருகே கோணத்து விளை பகுதிகளில் வீடுகள் இடிந்து விழுந்தது. சுமார் 15–க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்துள்ளது.